தமிழ்நிலம்

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு, நாட்டு உணர்ச்சி எப்படி வரும்?

பார்ப்பனர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பார்களானாலும், சமயத்துறையில் எவ்வளவு பேதம் கொண்டவர்களானாலும் சமசுக்கிருதம் என்கின்ற ஒருமொழி உணர்ச்சியாலேயே, அவர்கள் பிரிக்கமுடியாத—கட்டுப்பாடான இன உணர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறார்கள்;

உண்மையைச் சொல்லவேண்டுமானால், ஆரியம் [சமசுக்கிருதம்] சமயத்துறையில் வல்லாளுமைபெற்றதாலும், ஆங்கிலம் அரசியல் முதலிய பல துறைகளில் வல்லாளுமை பெற்றதாலுமே, தமிழர்களுக்கு இனவுணர்ச்சி வலுப்பெறவில்லை; குறைந்துவிட்டது. இப்போது மீதி உள்ள துறைகளில் இந்தி வல்லாளுமை பெற்று, இந்தி மயமாகிவிட்டால், தமிழன் நிலை என்ன ஆகும் என்பதைச் சிந்தியுங்கள்.

மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு; நாட்டு உணர்ச்சியோ நாட்டு நினைவோ எப்படி வரும்? நம் பிற்கால வழிமுறையினருக்காவது சிறிது நாட்டு உணர்ச்சி ஏற்படும்படி செய்ய வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி சிறிதாவது இருந்தால்தான் முடியும். அன்றியும் இன உணர்ச்சி சிறிதாவது இருக்க வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி இருந்தால்தான் முடியும்.

— தந்தை பெரியார் — 1952 'விடுதலை' ஆண்டுமலர்

தொகுதி-3] | தி. பி. 2016 | சிலை 28 | (12-1-1986) | 65 காசுகள் | [இதழ் எண்: 68] | [பகுதி 48-50

'ஆலோலம்' பாடி இந்தியை விரட்ட முடியாது; அடித்து விரட்டவேண்டும்!

'தமிழ்நாடு தனிநாடு' ஆகாமல் இந்தி ஒழியாது; யாராலும் ஒழிக்கவும் முடியாது!

அனைத்துலக அளவில் இராசீவின் கை மிக ஓங்குவதற்கு முன்னர் நாம் இக் கோரிக்கையை எழுப்பியாகவேண்டும்!

'தமிழீழம்', 'தனித் தமிழ்நாடு' - இரண்டுக்குமாகவே உலகத் தமிழினம் போராடவேண்டும்!

அஞ்சி அஞ்சிச் சாவதில் பயன் இல்லை!

ஆங்கிலத்தைத் தூக்கிப்பிடித்து, இந்தியைத் தவிர்க்கக்கூடாது; தமிழுக்காகவே இந்தியைத் தவிர்க்கவேண்டும்!

நம் இந்தியெதிர்ப்பு முயற்சிகள் பற்றிப் பாவலரேறு!

கடந்த கிழமை திராவிடர்கழகம் இந்தி எதிர்ப்பு மாநாட்டைச் சென்னை பெரியார் திடலில் நடத்திப் பல தீர்மானங்களை நிறைவேற்றி, ஓர் எதிர்ப்பு முயற்சியை அரசுக்குத் தெரிவித்துள்ளது.

திராவிடர் கழகம், நமக்கு எதிரான இயக்கம் அன்று; தோழமைக் கழகமே! ஆனாலும், அதன் செயற்பாடுகளும், அணுகு முறைகளும், நம் தமிழின முன்னேற்றத்தை முறையாக எடுத்துச் செல்வதற்குப் போதுமானவையாக இல்லாமல் இருப்பதுடன், சில நிலைகளில் போலித்தனமானவையாகவும் இருப்பதும், ஏதோ ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்திடையில், தம் பொதுநல ஈடுபாட்டைத் தக்கவைத்துக் கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைந்திருப்பதால், தமிழின நலம் கருதியும், காலத்தின் அருமையும், தேவையும் கருதியும் நாம் அதனையும், அதன் செயற்பாடுகளையும் இக்கால் திறனாய்வு முறையில் எடுத்துக் கூறியாக வேண்டியுள்ளதற்குப் பெரிதும் வருந்துகிறோம்.

இந்த வகையில் நாம், இதுவரை நேரிடையாக எந்தக் கருத்தையும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக இவ்வாறு எடுத்துக் கூறிட முன்வந்ததில்லை. ஆனாலும், இக்கால், தவிர்க்கவியலாத சில விளைவுகளை நோக்கி, அதைப்பற்றியும் சில பல கருத்துக்களைக் காணவேண்டிய கட்டாயத்துக்குக் கொணரப்பட்டுள்ளோம். எதிரான நோக்கிலன்று; சார்பான நோக்கிலேயே இக் கருத்துகள் இங்குக் கூறப்பெறுகின்றன என்பதை அன்பர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நம் மதிப்பிற்குரிய, மானமிகு வீரமணி அவர்களின் தமிழின முன்னேற்ற முயற்சிகளையும்; செயற்பாடுகளையும், உணர்ச்சியளவிலும், உழைப்பின் அடிப்படையிலும் என்றுமே நாம் பாராட்டவும்போற்றவும் கடமைப்பட்டவர்கள். தேவையான இடத்தில் தொலைவில் நின்றும், இணைந்து - இயங்கியும் நாம் அவ்வாறு பாராட்டியும்-போற்றியும் வந்திருக்கிறோம். ஆனாலும், அவரின் முயற்சிகளிலும், தமிழின முன்னேற்ற அணுகு முறைகளிலும், அவை தொடர்பான போராட்ட நிலைகளிலும், சில முரண்பாடான போக்குகள் தோன்றிய பின்னர், நாம் ஒதுங்கியும், ஒதுக்கப்பட்டுமே இருந்து வருகிறோம். இருப்பினும் அவர் முயற்சிகளுக்கு எதிர்ப்பான நிலைகளை நாம் அன்றும் - இன்றும் எந்த நிலையிலும் கடைப்பிடித்ததில்லை, இனியும் அத்தகைய நிலைக்கு நாம் வந்து விடப் போவதுமில்லை. ஆனாலும், கருத்துநிலையில், தமிழின நலம் நோக்கி, அவர் போக்குகளை உண்மையும் - உறுதியாகவும் நடத்திடவேண்டும் என்னும் கவலையுடன் வெளிப்படையாகச் சிலவற்றைச் சொல்லியே ஆகவேண்டும என்ற காலக் கட்டாயம் வந்துவிட்டது. இந்தவகையில் சில சொற்களை நாம் எச்சரிக்கையுடனும், தோழமையுணர்வுடனுமே கையாள விரும்புகிறோம். இவ்வாறு வெளிப்படையாக எழுதுவதற்காக, நடுநிலையும் அழுத்தமுமான உணர்வுடன், தமிழ் நலமும், தமிழின நாட்டு நலமும் கருதும் மெய்யன்பர்கள் நம்மைப் பொறுத்துக் கொள்வார்களாக.

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும

நம் இந்தியெதிர்ப்பு முயற்சிகள் பற்றிப் பாவலரேறு!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம் இந்தி எதிர்ப்பு முயற்சிகள் இன்று-நேற்று ஏற்பட்டவன்று. சரியாகச் சொன்னால், கடந்த அறுபது ஆண்டுகளாக நாம் இந்தியை எதிர்த்துக் குரல் கொடுத்து வருகிறோம். 1926 ஆம் ஆண்டிலேயே, இந்தி எதிர்ப்புக் குரல் தொடங்கிவிட்டது. தந்தை பெரியார் அவர்கள், தாம் தம 7-3-1926 ஆம் நாள், 'குடி அரசு' இதழிலேயே முதன் முதலாக 'தமிழிற்குத் துரோகமும் இந்திமொழியின் இரகசியமும்' என்று இந்தியை எதிர்த்தும், கண்டித்தும், 'தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும் பல கேடுகளில் (ஆபத்துகளில்) இந்தியும் ஒன்று" என்று எச்சரிக்கை செய்தும், விரிவாகவும்-விளக்கமாகவும் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டார். அப்பொழுதெல்லாம், இந்தி திணிக்கப்படவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இருப்பினும், பின்னால் இந்தத் தமிழினத்துக்கு வரவிருந்த மிகப் பெருங்கேட்டை முன்னமேயே உணர்ந்து, முன்னறிவித்த பெருமை அவருடையது. அப்பொழுதெல்லாம் நாமும், இன்று இந்தியைத் தீவிரமாக எதிர்க்கும் பலரும் (அறுபது அகவையைத் தாண்டியவர்களைத் தவிர) பிறந்தே இருக்கமாட்டோம். எனவே, நாம் பிறப்பதற்கு முன்பிருந்தே 'இந்தி' எனும் நச்சுச்செடிக்கு, இங்கிருந்து எதிர்ப்புக் குரல் கிளம்பிவிட்டது. அந்த முதல் குரலும், தந்தை பெரியாருடையது என்று எண்ணும்பொழுது நாம் வியப்பும், அதே சமயத்தில் சொல்லவொண்ணாத் துயரமும் கொள்கிறோம்.

இனி, தந்தை பெரியார் அந்தக் கட்டுரையைத் தொடர்ந்து இந்தியை எதிர்த்துப் பல மாநாடுகளை நடத்தியும், பல நூற்றுக் கணக்கான தீர்மானங்களை நிறைவேற்றியும் நில்லாமல், பல போராட்டங்களையும் தம் இறுதிக்காலம் வரை செய்து கொண்டிருந்தார். அந்தப் போராட்டங்களில் பங்குகொண்ட பெருமக்கள், பெரும் புலவர்கள், பெருந்தலைவர்கள், பேரறிஞர்கள் அனைவரும் 'தமிழக இந்தி எதிர்ப்பு' வரலாற்றில் நெடுகவும் வருகிறார்கள்; இன்னும் வந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

எனினும், இந்தி எனும், அன்று தோன்றிய நச்சுச் செடி, இன்று படிப்படியாய் பார்ப்பனர்களாலும், வடவர்களாலும், வல்லாட்சியாளர்களாலும் பெரிய நச்சு மரமாக வளர்க்கப்பட்டுப் பரவி, நம் அனைத்து மொழி, இன, நாட்டு, கலை, பண்பாட்டு முயற்சிகளையும் முன்னேற்றங்களையும் துளிர்க்கவும், வளரவும் விடாமல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் கால்கொண்டு காழ்த்து வருகிறது.

அந்த, இந்தி எனும் சண்டி மாட்டை-மதங்கொண்டு வெறி பிடித்துத் தமிழினத்தையே சட்டுக்குலைக்க வந்த வடநாட்டு யானையை இன்னும் நாம் அடக்கமுடியாமல், தந்தை பெரியார் அவர்களால் எண்ணியும்-எழுதியும், எதிர்ப்புக் காட்டியும், தீர்மானங்கள் போட்டும், போராட்டம் நடத்தியும், சிறை சென்றும், இம்மியும் அடக்கவோ, ஒடுக்கவோ இயலாமற்போன, அதே வழிகளை நாமும் கடைப்பிடித்து இந்தித் திணிப்பை ஒடுக்கவோ, ஒழித்தோ விட முடியுமா என்பதே நமது கேள்வி.

'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை' என்பார் திருவள்ளுவர். தந்தை பெரியார் அவர்கள் கையாண்ட அதே முறைகளை, அந்த அளவிலகூட கையாளாமல், அவர் ஈட்டியை எடுத்துக் குத்தியிருந்தால் நாம் ஆணியைக் கொண்டு குத்துவதைப்போல், அவர் தகரி (பீரங்கி) யைக் கொண்டு வேட்டுக் கிளப்பியிருந்தால், நாம் பட்டாசு வெடிகளைக் கொளுத்தி, அந்த வெறி யானையின் முன்னர் போடுவதுபோல், நாமும் சலசலப்புகளைக் கிளப்புவதும், தகரக் குவளைகளை எடுத்துத் தட்டிக் காட்டுவதும், தீப்பந்தங்களைப் போன்ற தீர்மானங்களை, வெறும் வாய்ச் சொற்களால் கொளுத்தி வீசி எறிவதும், போராட்டங்கள் என்னும் பெயரில் வண்ண வாணங்களையும், விளம்பரப் பூ மத்தாப்புகளையும் கொளுத்திப் பெரியார் திடலிலிருந்து வெளியிட்டுக் காட்டுவதும், ஏற்கனவே நாம் கண்டும், காட்டியும், கையாண்டும் புளித்துப்போனவையும், சலித்துப் போனவையுமான வழிமுறைகள் இல்லையா, என்பதே நம் அடுத்த கேள்வி.

தந்தை பெரியார், 1930 ஆம் ஆண்டு, தஞ்சை, நன்னிலத்தில் கூட்டிய 'சுயமரியாதை மாநாட்டிலேயே' (திராவிடர் கழகமாகக் கருக்கொண்டு உருவாகாமல் இருந்தபொழுதே) இந்தியை எதிர்த்துப் பேசியும், தீர்மானம் போட்டுக் காட்டினார். அதன்பின் 1937 இல் இராசாசி இந்தியைக் கட்டாயமாக்கியதை, அதே ஆண்டு இறுதியில் மாநாடு கூட்டிக் கண்டித்துத் 'தமிழ் நாட்டைத் தனி நாடாகப் பிரிக்கவேண்டும்' என்னும் வரலாற்றுப் புகழ்மிக்கத் தீர்மானத்தையும் நிறைவேற்றிக் காட்டினார்.

இன்று, நாம் அதுபோல் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவும், நிறைவேற்றவும் தொடை நடுங்கிக்கொண்டு, அஞ்சியஞ்சி, 'இப்படியே இந்தியைத் திணித்துக் கொண்டிருந்தால், இந்தியா சுக்கல் சுக்கலாக உடைந்து விடும்' என்று பேசியும், அப்பேச்சையே கூடத் தீர்மானமாக நிறைவேற்றத் துணிவின்றி, 'ஆங்கில மொழியையே இணைப்பு மொழியாக ஆக்கவேண்டும்' என்று ஆங்கிலத்தையே தூக்கிப் பிடித்தும், தீர்மானம் போட்டுக் கொண்டிருக்கிறோம். காட்டாற்று வெள்ளம்போல் கரைபுரண்டு வரும் போரின் இந்தித் திணிப்புக்கு இந்த எதிர்ப்பும், இணைவான, இனிப்புப் பேச்சும் போதுமா', என்பதே நம் மூன்றாவது கேள்வி.

சூடற்றுச் சுரணையற்று, நாம் காட்டுகின்ற உள்ளுணர்வுகளையும், கருத்துகளையும் கோரிக்கைகளையும், எதிர்ப்புகளையும், போராட்டங்களையும், ஒரு சிறு அளவிலும் காதிலோ, கருத்திலோ வாங்கிக் கொள்ளாத வடநாட்டு இந்தி வெறியர்களுக்கும், வல்லதிகார வஞ்சகர்களுக்கும், நெஞ்சில் ஈரமும்-இரக்கமும் அற்ற அரசியல் கொடியவர்களுக்குப் பெரியார் என்னும் அரிமாவாலேயே இவ்வகையான முயற்சிகளின் வழி உண்மையை உணர்த்த முடியவில்லை என்றால். அவரே இந்திக் கீழே போட்டுவிட்ட, எரிந்துபோய்க் கரியாகிவிட்ட போராட்ட நெய்ப் பந்தங்களை நாம் எடுத்து வீசி என்ன பயன்? யார் அஞ்சிக் குலை நடுங்கப் போகிறார்கள்? இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாவா?

1978 ஆகத்து 15 இல் பெரியார் திடலில், மானமிகு வீரமணி கூட்டிய இந்தி எதிர்ப்பு மாநாட்டிலேயே நம்மை ஏதோ, மதிப்பும் அன்பும் காட்டி அழைத்துக் கலந்துகொண்டு கருத்துரையாற்றக் கேட்டுக் கொண்டதால், நாம் அன்றே, அங்கேயே, கலைஞர், செட்டி நாட்டரசர், கி.ஆ.பெ. குன்றக்குடி அடிகளார், கி. இராமலிங்கனார் போன்ற தலைவர்களையெல்லாம் மேடையில் வைத்துக்கொண்டு சொன்னோம்: "இந்தியை எதிர்ப்பதெல்லாம் வீணான முயற்சிகள்; இந்தியை எதிர்க்கமுடியாது; பெரியாரை விட நாம் ஒன்றும் அதிகமான முயற்சியை அதில் செய்து விட முடியாது; எனவே இந்தியை எதிர்த்து மாநாடுகள் கூட்டுவதையும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதையும், போராட்டங்கள் நடத்துவதையும் கூட நாம் விட்டுவிட வேண்டும். இவ் வகையாலெல்லாம் நம் ஆற்றலை இழந்துகொண்டே போகக்கூடாது; நாம் இந்தியை எதிர்ப்பதை விட்டு விட்டு இந்திய அரசையே எதிர்க்கவேண்டும் தமிழ்நாட்டைத் தனி நாடாகப் பிரிக்கப் போராடவேண்டும். தமிழ்நாடு தனியாகப் பிரியும்வரை இந்தியும் ஒழியாது; வடநாட்டுச் சுரண்டலும் வல்லாண்மையும் ஒழியாது; பார்ப்பனியமும் ஒழியாது; இந்து மதமும் ஒழியாது; அதனால் தமிழும் வாழாது; தமிழனும் தலையெடுக்கமாட்டான்" என்று.

இதுபோலும் கருத்துகளை நாம் கூறுவதாலேயே 'திராவிடர் கழகம்' நம்மை ஒதுக்கி வைத்திருக்கிறது என்பதையும், நம் மிகச்சிறிய இயக்க முயற்சிகளுக்கும், ஆங்காங்கே, தரப்பெறுகின்ற ஆதரவைத் தடைப்படுத்தி, வளரவிடாமல் செய்கின்றார்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம். நாம் எவருக்கும் எதிராகவோ, அல்லது நம் வாழ்க்கை உயிர் பிழைப்புக்காகவோ, எந்த முயற்சியையும் நாம் தொடங்கவில்லை; செய்துகொண்டும் வரவில்லை. இமைய மலை போலும் நலன்களைக்கூட, நாம் எடுத்துக்கொண்டு சுமந்து நிற்கும் கொள்கைக் குன்றுக்காக, எற்றி உதைத்து விட்டு, எட்டி வந்து, இடரும் நடை போட்டு வருகிறோம். இந்த நிலைகளை நாம் எந்த விளம்பர நோக்கத்துடனும் கூறவில்லை. இந்திரா காந்தி, இராசீவ் காந்தி அல்லர், எந்தக் காந்தியையுமே, நம் மொழி, இன, நாட்டு நலக் கொள்கையில் என்றுமே பொருட்படுத்தியதும், மதித்ததும் கூட இல்லை. 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்னும் கொள்கையுணர்வில் மூச்சு விட்டுக் கொண்டிருப்பது எம் வாழ்க்கை. இம் மூச்சு அதன் பொருட்டு நிறுத்தப்படும் என்பதற்காக நாம் வருந்திக்கொண்டும் அஞ்சிக்கொண்டும் வாழவேண்டிய தேவை நமக்கில்லை. ஊரை அடித்து உலையில் கொட்ட வேண்டிய இன்றியமையாமையும் எமக்கில்லை. இன்றும் அரிசியும், பருப்பும், உப்பும், புளியும் அமைச்சுப் பட்டியலிலேயே சேர்க்கப் பெற்றுள்ளன. எனவே, நாம் இன்றிறந்தாலும் ஒன்றுதான்; என்று இறந்தாலும் ஒன்றுதான்! எனவே எவருக்காகவும் அஞ்சிக்கொண்டு. நமக்கென்று தேர்ந்துகொண்ட மொழி-இன-நாட்டு நலக் கருத்துகளைப்பற்றி உண்மைகளை யாருக்காகவும் ஒளிக்க வேண்டுவதில்லை.

இவற்றையெல்லாம் நம் நல்ல நெஞ்சுணர்வால் எண்ணிப் பாராமல் எம்மேல் இல்லாத பழிகளையும் இழிவுகளையும் சாற்றிக்கொண்டும், தூற்றிக்கொண்டும் கோழைகளையும் வயிறு கழுவ வாழ்க்கை நடத்தும் மோழைகளையும் தூண்டிவிட்டுக் கொண்டும், எம் தூய மொழி இன, நாட்டு நலத் தொண்டுக்கு மாசு கற்பித்து, எம்மையோ எம் கருத்துகளையோ வீழ்த்திவிட முடியாது என்பதால், இக் கருத்துகளை இத்துணை அழுத்தந்திருத்தமாக வெளியிட வேண்டியிருக்கின்றதென்று அன்பர்கள் கருதிக்கொள்ள வேண்டுகின்றேன். மற்று, இனநல, நாட்டுநலக் கொள்கையில் நாம் தொய்வு கொள்ளவேண்டிய தேவை என்ன வந்தது? யாருக்காக நாம் அஞ்ச வேண்டும்? பின்னர் ஏன் நம் முயற்சிகளில் இத்துணைத் தொய்வு? அச்சம்? கோழைத்தனம்?

என்ன இந்தி எதிர்ப்பு வேண்டிக்கிடக்கிறது இன்னும்? மாநாடுகள் எதற்கு? தீர்மானங்கள் எதற்கு? சொல்லிக்கொண்டிருந்தவர்களுக்கே, சொல்லிக் கொண்டிருந்தவற்றையே, சொல்லிக்கொண்டிருப்பவர்கள், சொல்லிக் கொண்டிருக்கிறோம்! இவற்றால் யாருக்கு என்ன புதுப்பயன் விளைந்து விடப்போகிறது? ஏன் நம்மிடத்தில் இந்த அடிமைத்தனமும் மடிமைத்தனமும்! நாங்கள் கூட்டினால், இந்தி எதிர்ப்பு மாநாடு சிறப்புறாது, என்ன பயனும் விளைந்துவிடாது என்பது போலவேதான் நீங்கள் கூட்டினாலும்! ஏன், கலைஞர் கூட்டுவதுதானே! அவர் கூட்டினால் வடநாட்டு அரசு, ஓரளவுக்கு அஞ்சும்! ஆனால், அவர் அவர்களைப் பார்த்து அஞ்சுகிறார்! 'அஞ்சுவதும், நாணுவதும், ஆமைபோல் வாழுவதும், கெஞ்சுவதுமாக' எத்தனை நாளைக்குக் கிடப்பது?

இந்தியைப் பற்றித்தான் எல்லா வரலாறும் இங்குள்ளவர்களுக்குத் தெரியுமே! கடந்த அறுபது ஆண்டுகளாக அதுபற்றிய விளக்கங்களும், அதை எதிர்த்துத் தகர்க்க வேண்டிய தேவைகளும்தாம் மலைமலையாக கூறப்பட்டு வந்துள்ளனவே! இன்னும் யாரைத் தட்டியெழுப்ப இம் மாநாடுகள்? யாருக்கு உணர்வூட்டுவதற்கு இம் முயற்சிகள்? யாரை ஏமாற்றுவதற்கு இப் போராட்டங்கள்?

நாம் இனி எழுப்ப வேண்டுவது, மக்களை அன்று; நம்மைத்தான் நாம் எழுப்பிக் கொள்ளவேண்டும்!

நாம் இனி உணர்வூட்ட வேண்டுவது, இளைஞர்களுக்கு அன்று, நமக்குத்தான் உணர்வூட்டிக் கொள்ளவேண்டும்!

நாம் இனி, ஏமாற்றுவதற்காகப் போராட்டங்கள் நடத்துக்கூடாது; ஏமாறாமல் இருக்கின்றோம் என்கிற போராட்டங்களை நடத்தவேண்டும்!

எழுதியிருக்கின்ற இந்தி எழுத்துகளை அழித்தால் அவன், மீண்டும், நம்முடைய வரிப்பணத்தை எடுத்தே நன்றாக அழுத்தந்திருத்தமாகவும், முன்னையவற்றையும் விடப் பெரிதாகவும் எழுதிக்கொள்கிறான்!

நாம் தூக்கும் கரிநெய்[தார்]ச் சட்டிக்கும் எழுது தூரிகைக்கும் செலவழிக்கும் பணத்தை, வெடி மருந்துக்கும், துமுக்கிக்கும் (துப்பாக்கி) செலவழிக்க வேண்டும்; அதே எழுத்துகளையாகிலும் மண்ணெய் கொண்டு அழிக்காமல், துமுக்கிகொண்டு சுடப்போகிறோம் என்று அறிவிக்க வேண்டும்; இந்திக்காரனைச் சுடாமற் போனாலும், இந்தி எழுத்தையாவது சுடும்படியான புதிய போராட்டத்தை, உந்துவேகம் கொண்ட உணர்வுச் செயலை நாம் நடத்திக்காட்ட வேண்டும்

இதற்குப் பெயர்தான் 'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை'!

தந்தை பெரியார் கரிநெய்ச்சட்டி எடுத்துக் கொண்டு போய் இந்தியை அழித்தால், நாம் துமுக்கி கொண்டாவது அந்த எழுத்தைச் சுட்டுக்காட்டிப் போராடவேண்டாவா? இப்படிச் செய்தாலன்றோ, நமக்குப் பின் வருபவர்களாகிலும், அதே துமுக்கியை எடுத்துப் போரிட வருவார்கள்!

எனவே, பறவைகளை விரட்டுகின்ற முறையில், 'ஆலோலம்' என்னும் 'இந்தி எதிர்ப்புக் கருத்துகளை மாநாடுகளில் எடுத்துக் கூறி அல்லது பாடி, இந்தி என்னும் காட்டெருமையை விரட்ட முடியாது. அதைக் கல்லால் அடித்துத் துரத்துகின்ற வகையில், 'தனித்தமிழ்நாடு' என்னும் கொள்கைக் கல்லால் அடித்து விரட்ட வேண்டும். 'தமிழ்நாடு தனிநாடு' ஆகாமல் இந்தி ஒழியாது; யாராலும் ஒழிக்க முடியாது. இதனைத் தெளிவாகத், தந்தை பெரியார் அவர்கள் உணர்ந்துதான் 1937-இலேயே தனித்தமிழ் நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தினார்கள். ஆனால், உயிர் மூச்சான இந்தக் கொள்கை என்னாயிற்று? ஏன் கைவிடப்பட்டது? இந்தக் கொள்கையை முன்வைத்து நாம்போராடினால் என்ன? ஏன் அச்சம்? அச்சப்பட்டு அச்சப்பட்டுத் தமிழினம் இத்துணைக் காலம், ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் அடிமையுற்றது போதாதா? அடுத்த தலைமுறையில் இப்பொழுதுள்ள போராட்ட நிலைகள் என்னாகும்?—என்பவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, அவற்றுக்கெல்லாம் முற்ற முடிந்த முடிபாக - வலித்தமான-ஒரு முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டாவா?

வீரமணி நடத்துகின்ற இந்த இந்தியெதிர்ப்பு மாநாட்டைக் கலைஞர் நடத்தினால், எல்லா நிலையிலும் இன்னும் வலுப்பெற வாய்ப்பிருக்குமே! மேலும் இதுபோன்ற மாநாடுகளைக் கடந்த அறுபது ஆண்டுகளாகச் சென்னையிலேயே நடத்திக் கொண்டிருப்பதை விட; வட மாநிலங்களில், குறிப்பாகத் தில்லியிலேயே போய் நடத்தினால், இன்னும் எழுச்சியாக இருக்காதா?

வடநாட்டுத் தலைவர்களையும், இங்கு நடைபெறும் இந்தி எதிர்ப்பில் சேர்ப்பது ஒருவகை விளம்பரத்திற்குத்தானே பயன்பட முடியும்? அவர்களால் என்ன விளைவு ஏற்பட்டு விடமுடியும்? அவர்கள் இந்தியை எதிர்க்கவில்லை; இந்திரா பேராயத்தை—அதன் ஆட்சியை எதிர்க்க இதையொரு வாய்ப்பாகத்தானே பயன்படுத்திக்கொள்கிறார்கள்! மேலும், அவர்கள் இந்தியை எதிர்ப்பதானால், அத்தகைய எதிர்ப்பை நம் தென்னாட்டு உறுப்பினர்களுடன் சேர்ந்து பேசுவதுதானே முறை! அந்த வகையில் அவர்கள் வடநாட்டுத் தலைவர்களையும் இணைத்துப் போராடலாமே! அவ்வாறில்லாமல், அவர்கள் தென்னாட்டில் கூட்டப்பெறும் மாநாடுகளில் வந்து, இந்தியெதிர்ப்புக் கருத்துகளை இங்குள்ள மக்களிடமே கூறுவதால் என்ன விளைவு ஏற்படப்போகிறது? அவர்களின் பொருட்டாகவே நாம் ஆங்கிலத்தை வேறு அளவிறந்து தூக்கிப்பிடித்துப் பேச வேண்டியிருக்கிறது.

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

தமிழகம் பிரியாமல் விடிவே இல்லை!

ஓய்ந்திடல் இல்லை, என்உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 68 (12-1-1986) [பகுதி-48-50

நம் இந்தியெதிர்ப்பு முயற்சிகள் பற்றிப் பாவலரேறு!

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்நேரத்தில், இங்குள்ள திராவிடர் கழகத் தோழர்களுக்கு நாம் ஒன்றைத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

நாம் ஆங்கிலத்தை முன்னிருத்தி இந்தியை எதிர்க்கத் தேவையில்லை. தமிழ்மொழியை முன்னிருத்தியே - தமிழ்மொழியின் வளர்ச்சியையும் வளத்தையும் முன்வைத்தே - இந்தியை நாம் எதிர்க்கவேண்டும். நாம் நம் தாய்மொழிக்காக இந்தியை எதிர்த்துப் போராடுகையில், இந்திக்காரர்கள் ஆங்கிலத்துக்காக இறங்கிவரட்டுமே! இப்பொழுது நாம் தமிழுக்காக இந்தியை எதிர்க்கிறோமா, அல்லது ஆங்கிலத்துக்காக அதை எதிர்க்கிறோமா? ஏன், இதில் குழப்பம் உண்டாக்க வேண்டும்?

தமிழ்மொழியை எண்ணுகையில் நமக்கு ஆங்கிலமும் சரி, வேறு எந்த மொழியும் சரி, அனைத்தும் இந்தியைப் போலவே அயல் மொழிகளே! ஆங்கிலம் என்றால் சருக்கரை மொழி; தமிழ் என்றால் வெல்லமா? இந்த மனப்பான்மையுடன் நாம் இந்தி எதிர்ப்புச் செய்யும்வரையில், நம் கோரிக்கையும் வெற்றி பெற முடியாது; நாமும் தன்னுரிமை பெறமுடியாது.

ஆங்கிலம் என்கிற மொழியின் பயன்படுத்தத்திற்காக நாம் அதைப் படித்துக்கொள்வதென்பது வேறு; அதற்காக நாம் இந்தியை எதிர்ப்பது என்பது வேறு. தமிழுக்காகவே நாம் இந்தியைஎதிர்க்கின்றோம் என்பதைப்பட்டையை உரித்தாற்போல் பளிச்சென்று வடநாட்டானுக்கு அடித்துச் சொல்ல நாம் ஏன் தயங்க வேண்டும்?

நம்மைப் பொறுத்தவரை, ஆங்கிலமும் இந்தியும் ஒன்றுதான். ஆங்கிலம் அறிவு மொழியானால் என்ன? அதற்கு மட்டும் நாம் அடிமை ஆகலாமா? 'இந்திமொழி வேண்டாம், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்கு' என்று நாம் சொல்லும்போது, 'ஆங்கிலம் என்னும் வேறு நாட்டு மொழிக்காக' நாம் வழக்குரிமை (வக்காலத்து) வாங்குவதாக அவர்கள் கூறுவார்களே தவிர, நம் தாய் மொழி தமிழுக்காகப் போராடுவதாக அவர்கள் கூற மாட்டார்களே!

அண்மையில் சென்னை, உயர்நெறி மன்றத்தில், இந்திப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு சலுகையைக் காட்டி மருத்துவக் கல்லூரியில் இடம் வேண்டும் என்று தொடுக்கப்பெற்ற வழக்கொன்றில், 'இந்தியை எதிர்த்ததை, தமிழ் மொழியின் பாதுகாப்புக்குப் போராடியதாகக் கருதுவதற்கு இடமில்லை' என்று தீர்ப்பு வழங்கியதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். (தினமணி 28-11-85) (வழக்கு மன்றத் தீர்ப்பின் பிறபகுதிகள் நம் கருத்துக்கு மாறுபட்டவையாகவே உள்ளன என்பதை நாம் கவனிக்கவேண்டிய தேவையில்லை)

ஆங்கிலம்-இந்தி-தொடர்பான இந்தக்கருத்தையும் 1978-ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய வீரமணி அவர்கள் கூட்டிய மாநாட்டிலேயே நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம் என்பதையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

எனவே, நம் தாய்மொழியான தமிழ்மொழியை வளர்க்கவும் வளப்படுத்தவுமே நாம் இந்தியை எதிர்க்கவேண்டும். இதே காரணத்துக்காகவுமே சமசுக்கிருதத்தையும் நாம் தவிர்க்கிறோம்; அல்லது எதிர்க்கிறோம் என்பதையும் அறிதல் வேண்டும்.

ஆங்கிலம் இந்தியாவின் இணைப்புமொழி ஆகவேண்டும் என்பதை வடநாட்டு இந்தி வெறியர்களும், இங்குள்ள தேசிய அடிமைகளும் ஒப்பமாட்டார்கள். இதற்குக் காரணம் வடவர்க்கு இந்திமொழியின் பேல் உள்ள வெறியும், இங்குள்ள தேசியத் திருடர்களுக்குத் தமிழ்மொழியின்மேல் உள்ள பற்றின்மையுமே! அதுபோலவே, இந்தியை எதிர்ப்பதற்கும் நாம் தமிழை விரும்புவதே அதன் மேலுள்ள பற்றே காரணமாக இருக்கவேண்டும்.

'சப்பான் மொழியில் படிக்க சீனர் விரும்பமாட்டார்கள்' என்பதை, 'இந்தியில் படிப்பதைத் தமிழர் விரும்பமாட்டார்கள்' என்பதற்கு மதிப்பிற்குரிய வீரமணி எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். 'அவ்வாறு கூறும்போது தமிழர் ஆங்கிலத்தில் மட்டும் படிப்பதை ஏன் விரும்பவேண்டும்?'

'எனக்குத் தமிழ்ப்பற்று இல்லாமல் இல்லை' என்று வீரமணி சொல்ல வேண்டுவதில்லை. அவ்வாறு இல்லை என்று யார் சொன்னது?

'ஆங்கிலம் அறிவியல் மொழியாக வளர்ச்சிபெற்றிருக்கிறது' — என்பதில் நமக்குக்கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், 'அந்த அளவுக்குத் தமிழும் வளர்ச்சிபெறவேண்டும்' என்னும் கருத்து இன்னும் தோன்றவில்லையே என்பதுதான் நம் வருத்தம்; மனக்குறை! அந்நிலை எளிதில் முடிகிறதோ இல்லையோ அந்த நோக்கமே நமக்கு வேண்டியதில்லை என்று நாம் சொல்லமுடியுமா? அப்படியானால், தமிழுக்காக நாம் ஏன் இத்தனை முயற்சிகள் செய்யவேண்டும்? எனவே, இந்திமொழிக்கு மட்டுமன்று, சமசுக்கிருதத்திற்கு மட்டுமன்று, ஆங்கிலத்திற்கும் நாம் அடிமையாகி விடக்கூடாது என்பதே நம் வலித்தமான ஒன்றிணைந்த கொள்கையாக, உணர்வாக இருத்தல் வேண்டும். இந்தக் கருத்து, இன்றுள்ள சூழலில் இயலாமல், அல்லது நிறைவேறாமல் இருக்கலாம், நாளைக்கும் அது நிறைவேறக்கூடாது என்றிருக்கலாமா? எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

ஆங்கிலத்தை நாம் விரும்பிக் கற்கலாம்; அதன்வழி, இன்றுள்ள அறிவியல் பயனையும் நாம் பெறலாம். ஆனால், வாழ்வியல் பயனையும், இழந்துபோன உரிமைகளையும், இனநலத்தையும் நாம் நம் தாய்மொழி வழியாகத்தானே பெற முடியும்!

இந்தியோ எதற்கும் பயன்படாத ஒரு வெற்றுமொழி இந்திய தேசிய நீரோட்டம் இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்பதற்காக மட்டுமே இந்தியைக் கற்கவும், தொழில்மொழியாக்கவும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், அதனால் முழுப்பயன் பெறுபவர் அல்லது பெறப்போகிறவர்கள் வடநாட்டுக் காரர்களும் இந்தி வெறியர்களும் பார்ப்பனர்களுந்தாம். தமிழரோ இந்தியால் என்றுமே இரண்டாந்தரக் குடிமக்களாகவே இருக்க முடியும். ஆங்கிலத்தை ஏற்பதும் ஓரளவு இத்தகைய விளைவைத்தானே ஏற்படுத்தும்? ஆங்கிலத்தை, நம் தமிழ்மொழியை இன்றைய அறிவியல் வாழ்க்கைக் கேற்பத் தகுதியுடையதாகச் செய்வதுவரையே, பயன்படுத்திக் கொள்ளும்படி செய்தல் வேண்டும். இறுதிவரையிலான, நிலையான முடிவு ஆங்கிலமே என்று இருக்கும்படி நாம் ஏற்றுக்கொள்ளவும் கூடாது; அவ்வாறு காலப்போக்கில் ஆகிவிடும்படி நாம் விட்டு விடவோ திட்டமிடவோ கூடாது.

எற்கனவே, வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் ஆங்கிலத்தையும், பிரெஞ்சையும் செருமனியையும், சீன, உருசிய மொழிகளையும், அந்தந்த நாடுகளில் படித்தும் பேசியும் வருவதுடன், தங்கள் தாய்மொழியான தமிழைப் படிக்க வாய்ப்பின்றியும், மறந்தும் வருகின்றனர். அத்தகைய நிலை ஆங்காங்குள்ள சூழல்களாலும் ஏற்படுகிறது. அந்த நிலைகளைத் தடுக்கவும் அவர்களுக்கிருக்க வேண்டிய தமிழ் ஈடுபாட்டை வளர்த்தெடுக்கவும் ஆன கவலையும், முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டிய இந்நேரத்தில், நம் அனைத்து முயற்சிகளும், போராட்டங்களும், நம் தாய்மொழியான தமிழை நோக்கியும், இன அடிமை நீக்கத்தையும் உரிமை மீட்பையும், நாட்டு விடுதலையையும் கருத்தில் கொண்டுமே செய்யப்பட வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாதது.

எனவே, விளம்பரத்திற்காகவும், நம்மேல் மக்கள் வைக்கவேண்டிய நம்பிக்கைக்காகவுமே நாம் வீணான போராட்டங்களையும், பயனற்ற முயற்சிகளையும் செய்துகொண்டிராமல், திட்டமிட்டுத் துணிவான, ஒட்டுமொத்தமான நாட்டு விடுதலை முயற்சியைக் கையிலெடுக்கவேண்டும்என்றும், அதையும் கலைஞர் முன்னின்று செயல்படுத்த வேண்டும் என்றும், பிற தமிழின நலங்கருதும் தலைவர்கள் இன்றைய அரசியல் பயன்களைக் கருத்தில் கொள்ளாமல் அதற்குத் துணிந்து, துணை நிற்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்துலக அளவில் இராசீவ் காந்தி தம் கைகளை வலுப்படுத்திக்கொள்ளும் அரசியல் தந்திர முயற்சிகள் நாள்தோறும் வேறு வேறு வகைகளில் திட்டமிட்டுச் செய்யப்பெற்று வருகின்றன. கிழக்காசிய வல்லதிகார நாட்டுத் தலைவர்கள் பலர் ஒன்றுகூடி, மக்களின் உண்மையான கோரிக்கைகளை நசுக்கிக் கீழ்மைப்படுத்தி வருவதும், அவர்களுடன் இணைந்து இராசீவ் காந்தியும் அத்தகைய முடிவை நோக்கித் திட்டமிட்டு வருவதும் இந்தியாவையே குடியரசு என்னும் பெயரால் ஓரதிகார ஆட்சிக்கும், மன்னர் மரபு தழுவும் ஒரு குடும்ப ஆட்சிக்கும் உட்படுத்த முயன்று வருவதும், இந்நிலையில் இந்தியத் தேசிய இனங்களின் உரிமையுணர்ச்சிகளே எதிர்காலத்தில் குழிதோண்டிப் புதைக்கப்படும் வாய்ப்புக்கூறுகள் வலிமை பெற்று வருவதும் உற்று நோக்கத் தக்கன. எனவே, நாம் உண்மையான தமிழின முன்னேற்றத்தையும், உரிமை மீட்பையும் நலத்தையும் விரும்புவோமானால், அத்தகைய முயற்சிகளுக்கான காலம் இதுவே என்று கருதி, இங்குள்ள அனைத்து இயக்கங்களும் தமிழ்த் தேசிய உரிமைக் குரலை உடனே எழுப்பியாகவேண்டும் என்று, மன, அறிவு, செயல் காழ்ப்பின்றி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

எதுவுமில்லாத தலைவர் ஒருவர்!

தான்சானியா என்ற நாடு கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ளது. 1961 இல் இது தன்னுரிமை அடைந்தது. தன்னுரிமை அடைந்த காலம் முதல் அத்தோபர், 1985 வரை, அதன் குடியரசுத் தலைவராக ஆட்சி புரிந்தார் சூலியசு நைரேரே. இவருக்குத் தற்போது 65 அகவை ஆகிறது. மிகச்சிறந்த கல்வியாளர். இவருக்கென்று சொந்தமாக நிலம் கிடையாது. சொந்தமாக எந்தத் தொழிலையும் செய்யவில்லை. அதிகமாகச் சொல்வதென்றால் சொந்தமாக ஒரு மகிழுந்து கூட வைத்திருக்கவில்லை.

உலக வரலாற்றிலேயே மிகவும் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவராகக் கருதப்படுகின்றார். 'கல்வி என்பது மாந்தனை உரிமையுள்ளவனாக மாற்ற வேண்டும். அஃதாவது அனைத்திலிருந்தும் முழு விடுதலையைக் கொடுக்கவேண்டும் என்னும் நைரேரே வரையறையே மிகச்சிறந்ததாகும். நாட்டு மக்களின் முன்னேற்றத்திலே தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட அந்தத் தலைவனுக்கு அம் மக்கள் பொருள்களையும், பணத்தையும் அளவில்லாமல் அன்பளிப்பாக அனுப்பினர். அதனைத் திரட்டி வைக்கக்கூட தம்மிடம் இடம் இல்லை; ஆகவே அனுப்பவேண்டாம் என அம் மக்களைக் கேட்டுக் கொண்டார். இப்படியும் தலைவர்கள் இருகின்றார்கள் என்பது தமிழ் மக்களுக்குப் புதுமையாக இருக்கும்.

— நன்றி 'மக்கள் மறுவாழ்வு'
திசம். 85

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"நோபல் பரிசு பெற்ற தென்னாட்டவர் யார் அண்ணா?"

"சி. வி. இராமன்."

"ஆங்கிலேயர் ஆட்சியின்போதே சென்னை உயர் முறை மன்ற நடுவராக இருந்த தென்னாட்டவர்?"

"முத்துசாமி அய்யர்."

"விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர்?"

"இராசகோபாலாச்சாரியார்."

"இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர்?"

"பண்டித நேரு."

"குடியரசுத் தலைவராக இருந்த இரு தென்னாட்டவர்?"

"இராதாகிருட்டிணன்; வி. வி. கிரி."

"கேரளத்தில் முதன்முதல் பொதுவுடைமைக் கட்சி ஆட்சி ஏற்பட்டபோது, முதல் அமைச்சராக வந்தவர்?"

"நம்பூதிரிபாத்."

"இன்றுள்ள இந்தியத் தலைமை அமைச்சர்?"

"இராசீவ் காந்தி."

"முதல் இந்திய விண்வெளி வீரர்?"

"இராகேசு சர்மா."

"அண்ணா! இவர்கள் எல்லோரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள்போல் தோன்றுகிறதே!"

"ஆமாம்."

"எப்படி அண்ணா, எல்லாச் சிறப்பும், உயர்வும் முதலிடமும் அவர்களுக்கே கிடைக்கின்றன?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

— தமிழவேள்

தமிழுக்காகவே நாம் இந்தியை எதிர்க்கவேண்டும்!

— தொடர்-3

உலகில் மண் விடுதலைக்குப் போராடும் மக்களினங்கள்!

— வியனரசு —

சிந்து பலுச்சித்தான் :

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடன் இருந்த பாக்கித்தான் 1947 ஆம் ஆண்டு மத வேறு பாட்டால் பிரிந்து, தனி அரசு அமைத்தது. பின் னர், 1972 ஆம் ஆண்டு மொழி வேறுபாட்டால் கிழக்கு வங்கம், பங்களாதேசு என்னும் நாடுகளாகப் பிரிந்து தனி அரசு அமைத்துக் கொண்டது.

இப்பொழுது பாக்கித்தானில் சிந்து ஆற்றங் கரையில் வாழ்ந்துவரும் பழங்குடி மக்களும், பலுச் சித்தான் மாநில மக்களும் தனி நாடு கேட்டுப் போராடி வருகிறார்கள் சிந்து-பலுசு எல்லைப்புற முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி, அதன் வழி விடுதலையை வென்றெடுக்க வேண்டுமென்ற முனைப்போடு செயல்பட்டு வருகிறார்கள். சிந்து - பலுசு கட்சிக் கோரிக்கை, பாக்கித்தான் மக்கள் கட்சித் தலைவர் சதோய் ஏற்றுக் கொண்டுள்ளார்; மற்றும் பன்னாட்டுத் தலைவர்கள் மதிக்கக்கூடிய முது பெரும் தலைவர் எல்லைகாந்தி இவர்களின் போராட் டத்திற்கு முழு ஒத்துழைப்பும், நல் ஆதரவும் வழங்கி வருகிறார்.

8. வடக்கு அயர்லாந்து :

இங்கிலாந்து ஆட்சியின் கீழ் உள்ள பல நாடுகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின் விடுதலை அடைந்துவிட்டன. ஆனால், உரிமை மீட்காத நாடு களும் சில உள்ளன. இதில் ஒரு நாடுதான் வடக்கு அயர்லாந்து இந்த நாட்டை அலதடார் எனும் மாநிலம் என்ற பெயரில் தன்னோடு இணைத்துக் கொண்டு, வடக்கு அயர்லாந்து மக்களின் உழைப் பைச் சுரண்டிக் கொண்டிருக்கும் இங்கிலாந்து அர சிடமிருந்து முழு விடுதலை பெற வேண்டுமென இந் நாட்டு மக்கள் போராடி வருகிறார்கள்.

இங்கிலாந்து. ஆங்கிலேயரும்-அயர்லாந்து மக்க ளும் மதத்தால் ஒன்றுபட்டவர்களானாலும், மொழி யாலும் இனத்தாலும் வேறுபட்டவர்கள். இரண் டாம் உலகப் போருக்குப்பின் தெற்கு அயர்லாந்து மொழியின் அடிப்படையில் இங்கிலாந்திடமிருந்து பிரிந்து தனி நாடாக மலர்ந்து இயங்கிக்கொண்டு வருகிறது

தெற்கு அயர்லாந்து, வடக்கு அயர்லாந்து மக்க ளுக்கு மிகவும் துணை நின்று வருவதோடு, வடக்கு அயர்லாந்து நாட்டு விடுதலையை உலக நாடுகளுக்கு எடுத்துச்சொல்லி, ஆதரவும் திரட்டி வருகிறது.

இந்நாடு இங்கிலாந்திடமிருந்து பிரியும்போது, வடக்கு அயர்லாந்து பிரிய மறுத்தது காரணம், அல்சுடார் மாநிலத்தில் வெள்ளையர்கள் பெரும் பான்மை இனமாக இருந்ததுதான். எனினும் தற் போது தெற்கு அயர்லாந்து; வடக்கு அயர்லாந்து மக்களுக்குத் தொடர்ந்து உதவி வருகிறது. விரை வில் வடக்கு அயர்லாந்து தனி நாடாக மலரும்.

9, ஆப்கானிசுத்தான் :

வெள்ளையர் ஆளுமை ஏந்துக்காகப் பல நாடு களை இணைத்து ஒரே நாடாக அறிவித்து ஆட்சி செய்து வந்தனர். அப்படிப்பட்ட நாடுகளில் ஒன்று தான் இந்தியாவும். இப்படி ஒரு பெயரில் முன் னொரு நாடு இருந்ததில்லை. வெள்ளையரிடமிருந்து விடுதலை பெறுமுன் இந்தியாவின் நிலப்பரப்பு, ஆப் கானிசுத்தான், பாக்கித்தான், பர்மா, திரவிட நாடு, இலங்கை ஆகிய ஐந்து நாடுகளையும் உள்ளடக்கி யதே இந்தியாவாக இருந்தது. (இதில் பல சிற்றரசு களும் இருந்தன.) ஆனால், இரண்டாம் உலகப் போருக்குப் பின், இந்தியா நான்கு நாடுகளாகப் பிரிந்தது தமிழ்நாடு மட்டும் பிரியவில்லை. பிரிந்த நாடுகளில் ஒன்றுதான் ஆப்கானிசுத்கான்.

இந்தியாவில் இருந்து பிரிந்து தனியரசு அமைத் துக்கொண்ட ஆப்கானிசுத்தானில் முடியாட்சியே அறிவிக்கப்பட்டு நடந்துகொண்டிருந்தது. இதில் முதலாளியச் சுரண்டல்பிரிவு வல்லாளுமை நாளுக்கு நாள் தங்கள் தங்கள் படை வலிவைப் பெருக்கி உழைக்கும் மக்களைக் கசக்கிப்பிழியும் தன்மையும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இதை உணர்ந்து கொண்ட தொழிலாளர்களும் உழவர்களும் இணைந்து கிளர்ச்சி செய்து, முதலாளிய வல்லாளு மைக்கு எதிராகப் போராடி வந்தார்கள். இதன் உச்சக்கட்டம் 1978 ஏப்பிரல் மாதத்தில் நிகழ்ந்தது. இந்த வேளையில் ஆப்கான் புரட்சியாளர்களும் பொது மக்களும் உருசியாவின் படைத்துறை உத வியை நாடினார்கள். இந்தக் காலத்தை எதிர்பார்த் திருந்த உருசியா. தனது படைத்துறையை அனுப் பிப் புரட்சியாளர்களை ஆட்சியில் அமர்த்தியது.

அந்தப் பணியோடு உருசியா நிற்கவில்லை. எந்த முதலாளிய வல்லாளுமையை (அமெரிக்கா ஏகாதி பத்தியத்தை) ஆப்கான் மக்கள் எதிர்த்துப்போராடி னார்களோ அதே சுரண்டல் தன்மையைச் சமத் துவம் (சோசலிசம்) என்னும் பெயரில் இப்பொழுது உருசியா செய்து வருகிறது. 1978 இல் அனுப்பிய படைத்துறையை இன்னும் திரும்பப் பெறவில்லை. இதை எதிர்த்து உண்மையான புரட்சியாளர்கள் கொரிலாத் தாக்குதல் மூலம் போராடி வருகிறார் கள். பொது மக்களும் அறவழி ஆர்ப்பாட்டங்கள் மூலமும் போராடி வருகிறார்கள். இந்த உண்மை யான புரட்சியாளர்களை அமெரிக்கக் கைப்பாவை கள் என்னும் பொய்ச் செய்தியை உருசியா உலகுக் குப் பரப்பி வருகிறது.

புரட்சிப் போராட்டக்காரர்கள் ஈரானிலும், பாக்கித்தானிலும் தங்கள் பயிற்சித் தளங்களை அமைத்துக்கொண்டு, எல்லைப்புறமாக உள்ளே நுழைந்து தாக்குதல்களை நடத்துகிறார்கள் என்று பாக்கித்தான் கூறுகிறது. ஆப்கான் எல்லைப்பகுதி யில் ஒரு பெரும் முட்கம்பி வேலியும் அமைத் துள்ளது.

இந்தச் சிக்கலுக்கு உண்மையான நல்ல தீர்வு ஏற்பட வேண்டுமானால், ஆப்கானில் நிறுத்திவைக் கப்பட்டுள்ள உருசியப் படையைத் திரும்பப் பெற வேண்டுமென அண்மையில் சீனா சென்று திரும்பிய பங்களாதேசு குடியரசுத் தலைவர் எர்சாத் கூறியுள் ளார். ஆனால், உருசியா, அமெரிக்கா, பாக்கிசுத் தான் ஊடுருவல்கள் முற்றிலும் ஒழிக்கப்பட்ட பின்புதான் படை திரும்பப் பெறப்படுமென்றும் உருசிய அரசு ஆப்கானில உள்ள இளைஞர்களை வலுக் கட்டாயமாக உருசியாவிற்கு அழைத்துச் சென்று உருசியக் கல்வியைக் கட்டாயப் பாடமாக்கிச் சொல் லிக்கொடுத்து இளைஞர்களை மூளைச் சலவை செய்து துன்புறுத்துகிறது. இந்தச் சிக்கலின் அடிப்படையில் ஆப்கான் மக்கள் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர் கள் பாக்கித்தானில் ஏதிலிகளாகத் தஞ்சம் புகுந் துள்ளார்கள். இதே நிலையிலும், மக்கள் அறவழி யிலும், கொரில்லாப் போராட்ட வீரர்கள் மறவழி யிலும் தொடர்ந்து போராடித் தங்கள் நாட்டின் உண்மையான விடுதலைக்குப்பாடுபட்டு வருகிறார்கள்.

10. சகாராவி :

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றுதான் சகாரவி என்னும் சிறிய நாடு. இங்கு இசுப்பயின் நாட்டுச் சுரண்டல்காரர்கள், மற்றும் மொராக்கோ நாட்டுக் காரர்களும், அந்நாட்டு மக்களைக் கொடுமைப் படுத் துவதோடு, மக்களின் நிலங்களையும் பெருமளவில் கையகப்படுத்தி வஞ்சித்து வந்தார்கள்: இதை எதிர்த்துச்சகாராவி நாட்டு மக்கள் பெரும்போராட் டங்கள் நடத்தி 1976-ஆம் ஆண்டு சகாரவியை அரபு மக்கள் நாயகக் குடியரசாக அமைத்தார்கள்.

இந்தக் குடியரசு ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, மீண்டும் மொராக்கோ நாட்டுக்காரர்கள், அரபு இன மக்களின் நிலங்களைக் கையகப்படுத்திக் கடுமை யான தாக்குதல்களையும் கட்டவிழ்த்து விட்டுக் கொடுமைகள் செய்து, ஓயாத தொல்லையைக் கொடுத்து வந்தனர்.

மொராக்கோ நாட்டுச் சுரண்டல்காரர்களுக்கு ஆதரவாகவும், கருத்துக் உறவுமாக 30 ஆயிரம் படை வீரர்களை அனுப்பி, சகாராவி நாட்டு மக்களை அடக்கி ஒடுக்கிவிட, மொராக்க திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. இவர்களுக்கு அமெரிக்கா வும் மிகுதியாகத் துணை நின்று வருகிறது.

இவற்றை எல்லாம் எதிர்த்து சகாரவி நாட்டு அரபு இன இளைஞர்களும், மக்களும் கடுமையான முறையில் போராடி வருகிறார்கள். போராட்டக் காரர்கள் பொலிசாரியோ விடுதலை முன்னணி என்ற அமைப்பு வழியாக அனைத்துப் போராட்டக் காரர்களையும் இணைத்துத் தொடர்ந்து போராடி விரைவில் வெற்றி பெறுவோம் எனக்கூறி வரு கிறார்கள். (தொடரும்)

ஒரு கருத்து மடல் :

நடுவணரசுத் தேர்வுகளுக்குத் தமிழர்கள் தகுதியற்றவர்களா?

அன்புக்கெழுமிய ஐயா அவர்களுக்கு !

தங்களது இதழான "தமிழ் நிலத்"தை படிக்க நேர்ந்தது. பல்வேறு குறைகளிலும் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யப்பாடுபட்டு வரும் ஓர் இயக்கம் உ.த.மு.க. என்பதும் அறிந்தேன்.

ஆனால், தமிழர்களின் நிலை என்ன? தமிழகத் தில் இலவயக் கல்வி வந்து ஏறக்குறைய முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இலவயக் கல்வி யிலே படிப்பை முடிக்கத் தொடங்கி, கிட்டத் தட்ட 20 ஆண்டுகள் ஆகிவிட்டன: இருந்தும், நடுவண் அரசு போட்டித் தேர்வுகளில் தமிழர்களின் நிலை தாம் என்ன? தமிழ்நாட்டிலிருந்து ஓரளவு தேர்வு பெற்று வந்தாலும், தமிழர்கள் தேர்வு பெறுவது அவர்களிலும் ஐந்து முதல் பத்து விழுக் காட்டுக்கு மேல் இராது. தமிழ் நாட்டில் 95 விழுக் காடு தமிழர்கள் இருந்தபோதிலும், தமிழ் நாட்டி லிருந்து போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் மாணவர்களில் ஐந்து அல்லது பத்து விழுக்காடு மட்டும் இருப்பதேன்? தமிழர்களுக்கு அறிவுத்திறன் இல்லையா? பல்வேறு வாய்ப்புகளைப் பற்றித் தெரியாமல் இருக்கிறார்களா? எனக்குச் சரியாகப் புரியவில்லை. தமிழர்களின் உண்மையான எண்ணங்கள், இலக்கிய மேம்பாடு, பண்பாடு மற்ற வடநாட்டினருக்குத் தெரிய வைக்க வேண்டுமென் றால், தமிழர்கள் இம் மாதிரியான போட்டித் தேர்வுகளில் அதிக அளவில் வருவது மிகவும் இன்றி யமையாத தொன்றாகும்.

• தற்போது உலவி வரும் இந்த இழிநிலையைப் போக்கிட உ.த.மு.க. முன் வரவேண்டும். இத் திட் டத்தைக் கீழ்க்காணுமாறு செயல்படுத்தலாம்.

1. தமிழ்நாட்டில் 25 முதல் 50 இடங்களில் இதற்கான கிளைகள் ஏற்படுத்த வேண்டும்.

2. ஒவ்வோர் இடத்திலும் (ஊரிலோ - நக ரிலோ) ஐந்து முதல் பத்துப்பேர்கள் அடங்கிய குழு ஏற்படுத்த வேண்டும். ஒருவர் அல்லது இருவர் கூட இதை முன்னிட்டு நடத்த இயலும்.

3. ஒவ்வொரு தேர்வுக்கும் (எடுத்துக்காட்டாக National Defence Academy exam, Clerk's Grade Exam) விளம்பரம் வந்தவுடனேயே அந்தந்தக் கிளை களைச் சேர்ந்தவர்கள், இளைஞர்களை அணுகித் தேர் வுக்கு வேண்டுகை செய்யச் சொல்லவேண்டும்.

4. நகரின் நடுவில் உள்ள ஒரு பள்ளியில் இல வயமாக மாலை நேர வகுப்புகள் நடத்தலாம்.

5. ஆங்கிலம், கணிதம், பொது அறிவு இந்த மூன்று மட்டும் எல்லாத் தேர்வுகளிலும் கேட்கப் படுவதால், இந்தத் துறைகளில் சிறந்து விளங்கும் ஆசிரியத் தமிழர்களை இலவயமாக வகுப்பு எடுக்கக் கூறலாம்.

6. அடிக்கடி தேர்வுகள் நடத்தி மாணவர்களை அணியம் செய்து கொள்ளலாம்.

தில்லி மாநகரில் உள்ள எங்கள் தில்லித் தமிழ் நண்பர்கள் குழாம் சென்ற ஆண்டு தமிழக இளை ஞர்களுக்காக 'Asst. Grade Exam." என்ற தேர் வுக்கு ஐந்தாறு கிழமைகள் (விடுமுறை நாள்களில்) வகுப்புகள் நடத்தினோம். இந்த ஆண்டு தில்லியில் உள்ள "தமிழ் இளைஞர் பண்பாட்டுக் கழகம்" பல் வேறு போட்டித் தேர்வுகளுக்கு வகுப்புகள் நடத்தி வருகின்றன. அந்த வகுப்பில் பயின்ற ஓரிரு மாண வர்கள் Civil Services Exam-Prelimirary - யில் தேர்வு பெற்றுள்ளனர் என்பதும் மிகவும் மகிழ்ச் சிக்குரிய ஒன்றாகும்.

தமிழகத்தில இந்தத் திட்டத்தை முதலில் ஓரிரு இடங்களில் மட்டுமாவது செயல்படுத்தலாம். எங்களது ஒத்துழைப்பு ஏதாவது தேவையென்றால் செய்யவும் அணியமாக உள்ளோம்.

இன்னணம், செயலர்,

— தில்லித் தமிழ் நண்பர்கள் குழு, புதுதில்லி.

இந்தியா, மக்கள் நாயக நாடா? கொடுமைகள் நாயக நாடா?

இந்தியாவில் வட மாநிலங்களில் சிறுவர்கள் மிகவும் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் எனும் துயரம் மிகுந்த செய்தி, நெஞ்சைப் பதற வைக்கின் றது. மக்கள் உரிமைக்காகவும், அரசியல் தலைவர்கள் நலத்தில் மக்கள் பணம் வீணாவதைத் தடுத்து நிறுத்துவதற்காகவும் போராடி வரும பல்வேறு போராட்டக்காரர்களை அடக்கி ஒடுக்கிவரும் அரசு, அதற்கு மேலும் வன்முறைத் தடுப்புச் சட்டம் கொண்டுவந்து, மக்கள் நாயகஉரிமையில் போராடும் பொது மக்களையும் கொடுமைப்படுத்த முனைப்போடு ஈடுபடும் அரசு கீழ்க்காணும் கொடுமைகள் செய்து வரும் கொடுமையாளர்களை என்ன தண்டனைக் கொடுத்துத் தண்டிக்கிறது?

'மாந்த எலும்புக் கூடுகள், மாந்தத் தலைகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் உரிமங்கள் பெறப்பட்ட இரண்டு நிறுவனங்கள், கல்கத்தாவில் (பொதுவுடைமைக் கட்சிக்காரர்களின் ஆட்சி நடக் கும் மேற்கு வங்கத் தலைநகரில்) இயங்கி வருகின் றன. இந்திரா காந்தியின் நெருக்கடி நிலைக் காலக் கட்டத்தில் இந்த ஏற்றுமதிக்குத் தடையிருந்து வந் தது. பின்னர் வந்த, 'சனதா' ஆட்சிக் காலத்தில் இந்த நிறுவனங்களுக்கிருந்த தடையை நீக்கிவிட் டார்களாம். இது தொடர்பாக அண்மையில் வெளி வந்த திடுக்கிடும் கொடுமையான செய்திகள் நெஞ் சைப் பிளக்கின்றது. இது மக்கள் நாயக நாடா? கொடுமைகள் நாயக நாடா? என எண்ணத் தோன்றுகிறது?

இந்த நிறுவனங்களின் வாயிலாக ஆண்டு தோறும் கோடிக்கணக்கான உருபாக்களுக்கு எலும் புக்கூடுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கிட்டத் தட்ட 23 நாடுகளுக்கு இந்த நிறுவனங்களின் தொடர்பு இருக்கிறது. அப்படி ஏற்றுமதி செய்யப் படும் எலும்புக் கூடுகளில், இளம் சிறுவர்களின் தலை களே மிக அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சிறுவர்களைக் கடத்தி வந்து, அவர்கள் தலைகளை மட்டும் துண்டித்துக் கொடுக்கும் முகவர் களை பீகார் மாநிலத்தில் அமர்த்தி வைத்திருக்கிறார் கள். ஆண்டு ஒன்றிற்கு ஏறத்தாழ 18 ஆயிரம். சிறுவர்களின் தலைகள் இந்த இரண்டு நிறுவனங் களின் வாயிலாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படு கின்றன. குழந்தைகளின் தலைகளை வெட்டி எடுத் துக்கொண்டு உடல்களைக்கங்கையாற்றில்வீசிஎறிந்து விடுகின்றனர். இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் காணாமல் போகும் சிறுவர்கள் இப்படிப்பட்டவர்களால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலைசெய்து பணம்பண்ணி வரும் இக்கொடுமையாளர்களை, மாந்த இனக் கயவர் களை, அரசு கொணர்ந்திருக்கும் வன்முறைத் தடுப்புச் சட்டம் என்ன செய்தது? இந்தக் கொடுமைகளை எதிர்த்துப் போராடவரும் மக்களைக்கூட வன்முறை யாளர்கள் என்று குற்றம் சாட்டிச் சிறைச்சாலையில் தள்ளிக் கொடுமைப்படுத்தும் அரசாகத்தான் இந்திய அரசு இருக்குமா? அல்லது உண்மையான கொடுமை யாளர்களை - வன்முறையாளர்களைத் தண்டிக்கும் அரசாக இருக்குமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

-வியன்.

தமிழா! நீ உன் நாட்டுக்காகப் போராடுவது என்று?

தொடர் - 3

திம்புப் பேச்சா? தில்லுமல்லு நாடகமா?

— வள்ளிகேள்வன் —

பாலசிங்கம் இலங்கைப் படுகொலைகளை வன்மையாகக் கண்டித்தார். மேலும், "இந்திய அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்கள் கருவிப்போராட்டத்தைக் கைவிட்டுத் திம்புப் பேச்சில் கலந்துகொண்ட நிலையில், இந்திய அரசு எங்கள் மீது வசைமாரி பொழிவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேநேரத்தில் இலங்கை அரசு தன் விருப்பமான போக்கில் நடந்து கொள்வதை இந்தியா பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதை எங்களால் பொறுத்துக்கொள்ள முடியாது. இப்போது சிங்களப் படையினர் தமிழர்களைக் கொன்று குவித்து, அரத்த ஆறு ஓடினாலும், எங்களுடைய தூய ஆற்றலாலும், படைத் திறமையாலும் இப் போரில் இறுதி வெற்றி எங்களுக்கே" என்று கூறினார்.

நயன்மையாகப் பார்க்கப்போனால் பாலசிங்கம் சுட்டிக் காட்டியவற்றில் தவறு என்ன இருக்கிறது? நூற்றுக்கு நூறு உண்மையல்லவா?

இராமேசுவரத் தமிழனைக் கூடக் காப்பாற்ற மனமில்லாத இந்திய அரசு (அவர்கள் இந்தியக் குடிமக்களாயிருந்தும்), போராளிகளை நாடு கடத்தியது கொடுங்கோன்மையான செயலாகும்.

முடிவில் இராசீவ், பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு ஈழப்போராளிகளின் வலிமையைக் குறைக்கப் பார்க்கிறார் என்றே கருதவேண்டியிருக்கிறது. அதுமட்டுமன்று, நாடு கடத்தல் மூலம் செயவர்த்தனாவுக்குத் தமது ஆதரவை வெளிப்படையாகவே காட்டிவிட்டார் என்றுதான் கூறவேண்டும்.

ஏனெனில், இலங்கை செய்தித் தொடர்பு அமைச்சர் ஆனந்த தீசா டி ஆல்விசு, "இத்தகைய நாடு கடத்தும் நடவடிக்கையை இந்தியா முன்பே செய்திருந்தால், இலங்கையில் கலவரங்களும், வன்முறைகளும் நடைபெற்றிருக்காது" என்று எக்களிப்போடு கூறியிருக்கிறார்.

இராசீவின் நாடு கடத்தல் நடவடிக்கைக்கு, இங்கே சுரணை கெட்ட தமிழக அமைச்சர்கள் மூட்டுக் கொடுத்து நயன்மைப் படுத்தும்போது, டி ஆல்விசு ஏன் அப்படிக் கூறமாட்டார்?

இங்கே, தமிழக அரசே ஈழப் போராளிகளுக்கு எதிராக ஆகிவிட்டமையால், இலங்கையில் தடப்பாரின்றி இனப்படுகொலை மிகவும் முனைப்பாக நடைபெறுகிறது.

இலங்கைப் படைத்துறை அமைச்சனும், கொடுங்கோலனும் ஆன இலலித் அதுலத் முதலியின் நேரடி மேற்பார்வையில் தமிழன் தேடிக் கண்டுபிடித்துக் கொல்லப்படுகிறான்.

திரிகோணமலைப் பகுதி முழுவதுமே காலியாகி வெறிச்சோடி விட்டது.

ஈழத் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் அலை அலையாக, தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்டு, அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டு அழித்தொழிக்கும் கொடிய இனப் படுகொலைத் திட்டத்தை சிங்கள அரசு இன்னும் நடைமுறைப் படுத்திக்கொண்டேயிருக்கிறது.

கொடுங்கோலன் இலலித் அதுலத் முதலியின் கட்டளைப்படி இனி ஈழத்தமிழன் சொந்த மாவட்டத்திலோ மலையக மாவட்டங்களிலே வாழக்கூடாது என்று அவர்களுக்குச் சாவோலை கொடுக்கப்பட்டு வருகிறது. அதுலத் முதலியின் கையொப்பமிட்ட ஆவணங்கள் கொடுக்கப்பட்டால், தமிழரைச் சட்டப்படி கொல்லமுடியும் என்று சிங்களப் படைத்துறைக்குப் பச்சைக் கொடியும் காட்டப்பட்டுள்ளது.

எனவே, எந்தெந்தப் பகுதியில் தமிழர்கள் உள்ளனர் என்ற பட்டியலை வைத்துக்கொண்டு, அவர்களைத் தேடிப் பிடித்துச் சிங்களப் படையினர் கொன்று வருகின்றனர். அதிக அளவு தமிழர்களைக் கொன்ற சிங்கள வீரனுக்கு அதுலத் முதலி பாராட்டுத்தெரிவிக்கிறார்.

இதனால், இனி இலங்கையில் வாழவே முடியாது என்று எண்ணித்தான் ஈழத் தமிழர்கள் தப்பித்துத் தமிழகம் வருகிறார்கள்.

இவ்வாறு தமிழர்களுக்குச் சாவோலை கொடுத்துக்கொண்டே, மறுபக்கம் ஒப்புறவுப்பேச்சு நடத்துவதாக சிங்கள அரசு உலக நாடுகளின் கண்களை மறைத்துக் கொண்டிருக்கிறது.

இதை உணர்ந்த ஈழப் போராளிகள் உலக நாடுகளின் தவறான கண்ணோட்டத்திற்கு ஆளாகிவிடாமல் இருக்க, பேசசுகளில் பங்கு கொள்கிறார்கள்.

ஆனால் இராசீவோ, போராளிகளின் இந்த இக்கட்டான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, ஈழத் தமிழர்களுக்குப் பயன் தராத வெற்றுத் திட்டத்தை வைத்துக்கொண்டு, உடன்படும்படி வற்புறுத்துகிறார். அஃதாவது தமது அதிகாரத்தை அவர்கள் மீது திணிக்கிறார் எனில் அது மிகையாகாது. எப்படியும் உலக நாடுகளின் கண்ணோட்டத்தில் ஈழ விடுதலைப் போராளிகளைத் தவறாகக் காட்டவேண்டும் என்பதே இராசீவின் இப்போதைய முயற்சி.

இராசீவ் இப்பொழுது புதிய சமன்மைத் திட்டத்தை அணியப்படுத்தியிருக்கையில், இலங்கையில் என்ன ஏற்பாடு நடக்கிறது தெரியுமா?

இலங்கை அரசு அதிக அளவில் போர்க் கருவிகளை வாங்கிக் குவிக்கிறது என்பதையும் அதிகப்படியானவர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதையும் கடந்த அக்டோ 18 ஆம் பக்கல் இலண்டனில் நடந்த சிங்களர்களின் உலகக் கூட்டமைப்பில் பேசிய அதுலத் முதலி உறுதிப்படுத்தியிருக்கிறார்.

எனவே, இலங்கை நம் புதிய போர்க் கருவிச் சந்தையாக மாறியிருக்கிறது. இதனால் பன்னாட்டுப் போர்க்கருவி வணிகர்களும் இலங்கையில் வந்து கூடியுள்ளனர். ஒரு நாளைக்கு ஐம்பது இலக்கத்திற்கும் மேலாக இலங்கைப் படைத்துறைக்குச் செலவிடப்படுகிறது. அஃதாவது மொத்தத் தேசியத் தன்னுக்கங்களில் 5 விழுக்காடு படைத்துறைக்காகச் செலவிடப்படுகிறது. இது 1983 ஆம் ஆண்டு செலவிடப்பட்டதை விட 7 மடங்கு அதிகமாகும்.

இப்படிப்பட்ட ஏதமான சூழ்நிலையில் இந்த உண்மைகளையெல்லாம் கண்டுகொள்ளாமல், புதிய சமன்மைத் திட்டம் என்ற பெயரில், ஈழப்போராளிகளின் வலிமையை சிதறடிக்கப் பார்க்கிறார் இராசீவ் காந்தி.

எனவே, ஈழச் சிக்கலின் அனைத்து நிலைகளையும் தெளிவாக உணர்ந்துள்ள விடுதலைப் போராளிகள் எந்த நிலையிலும் 'தனி ஈழம்' என்ற கொள்கையைக் கைவிடாமலும், இந்திய அரசின், எடுபிடித் தமிழக அரசின் சூழ்ச்சி வலைகளில் அகப்படாமலும் அவர்கள் வளர்த்தெடுத்த இலக்கை அடையவேண்டும் என்று கூறி இக்கட்டுரை நிறைவுபெறுகிறது. 0

உ.த.மு.க.செய்திகள்

திருப்பூரில் உ.த.மு.க. கருத்தரங்கு!

பாவலரேறு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்!

சென்ற துலை 29 (14-11-85) மாலை 6 மணியளவில் திருப்பூர், தேவாங்கபுரம் தொடக்கப்பள்ளி அரங்கில், திருப்பூர் உ.த.மு.க. கிளை சார்பில, கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்குக் கோவை மாவட்டப்பொருளர், பல்லடம் திரு.மா. ஆறுமுகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தொடக்கத்தில் தலைவரை முன்மொழிந்து திரு சீனி. அழகரசன் (சௌந்திரராசன்) அவர்களும் வழிமொழிந்து திரு. க. வெள்ளிமலை அவர்களும உரையாற்றினார்கள். திரு. திருமேனி வரைவேறபுரையாற்றினார். தலைவரின் முன்னுரைக்குப் பின்னர், பொதுவுடைமைக் கொள்கை உணர்வாளர் திரு. அருள் இனியன் (கருணா மனோகரன்) தொடக்க உரையாற்றினார்.

பின்னர் கழகக் கொள்கைகளை விளக்கியும் அவற்றின் தேவைகளை விரிவாகவும் அன்பர்கள் விளக்கவுரைகள் நிகழ்த்தினார்கள். 'தூய்மையான தமிழ் மொழி முன்னேற்றம்' என்னும் கொள்கையைத் தென்மொழி க. தமிழப்பன் அவர்களும், 'சாதியற்ற-மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்' என்னும் கொள்கையை, திரு. மா. ஆ. மாசிலாமணி அவர்களும், 'இழிவுகளும-பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்' என்னும் கொள்கையைப் பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் திரு. பாவேந்தர் இராமலிங்கம், 'தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்' என்னும் கொள்கையைத் திருவாட்டி தமிழ்ச்செல்வி அவர்களும், 'மனம் - அறிவு - வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி' என்னும் கொள்கையை, திரு. சீனி-செந்தேவன் அவர்களும், 'பழந்தமிழ் மரபுக்கும மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்' என்னும் கொள்கையை, திரு. நீறணி பவளக்குன்றன் அவர்களும், 'எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை' என்னும் கொள்கையை திரு. கா. சு. சட்டநாதன் அவர்களும் மிகவும் தெளிவாக, நடைமுறை இயக்கங்களுடன் பொருத்தி விளக்கினார்கள். அடுத்து, தமிழீழ விடுதலைப்போராளி, திரு. சிவம் அவர்கள், தமிழீழத்தில் நடக்கும் போராட்டச் செய்திகளை விளக்கிப்பேசினார்.

இறுதியில்கழக முதல்வர்பாவலரேறுபெருஞ்சித்திரனார் அவர்கள் 'தமிழ்க் குமுகாயத்தின் மீதான அகப்புறத் தாக்கங்கள்' என்னும் தலைப்பில் பேச எழுந்து, அனைவரையும் விளித்து, வணக்கமும் வாழ்த்தும் தெரிவித்துவிட்டு, 'பொதுவாகவே நம் இயக்கக் கூட்டங்களுக்கு ஓரளவு கூட்டம் குறைவாகவும், பிற அரசியல் தழுவிய கூட்டங்களுக்குக் கூட்டம் மிகுதியாகவும் வருதல், கருத்துரைகளால் ஏற்படும் விளைவு அன்று; விளம்பரத்தாலும், ஆரவாரத்தாலும் ஏற்படுவதே ஆகும். நம்மிடம் கருத்தும் உழைப்பும். உண்மையும உள்ளன. வசதியும் வாய்ப்புகளும இல்லை. எனவே கூட்டம் இப்படித்தான் வரும். அதுபற்றி எவரும் கவலைகொள்ள வேண்டியதில்லை' என்றும், போராட்டத்தில் பயன்படுத்தப் பெறும் அனைத்துக் குண்டுகளுமே எதிரியைக் கொல்வதில்லை, ஏதாவது ஒரு குண்டுதான் அவனுடைய உயிரைப் பறிக்கும்: எதிர்காலத்தில் அது நம்முடைய குண்டாகத்தான் இருக்கும். எனவே, நம் முயற்சியை முடிந்த அளவு செய்துகொண்டே போவதுதான் நம் கடமையாக இருக்கவேண்டுமே தவிர, விளம்பரம் இல்லை; வாய்ப்புகள் இல்லை என்று எவரும் சோர்வு அடையத் தேவையில்லை என்றும் முன்னுரையாகக் கூறிவிட்டு, 'நம் இனத்துக்கு ஏற்பட்ட அகத்தாக்கங்களால் இரண்டு வகையான விளைவுகள் ஏற்படுகின்றன; அவை நம் முயற்சிக்கு மெலிவை உண்டாக்குதலும், எதிரிகளுக்குத் துணை போவதன் வழி, அவர்களுக்கு வலிவை உண்டாக்குதலும் ஆகும். ஆனால், புறத்தாக்கத்தால் நமக்கு ஒரே விளைவுதான் ஏற்படும்; அது நம்மை அனைத்து நிலைகளலும் முன்னேறாமல் செய்வதே ஆகும்' என்றும், தொடங்கி, நம் இயக்கம் என்னென்ன வகைகளில் நம் இன முன்னேற்றத்தை எடுத்துச் செல்லப் போகிறது என்பதை மிக விளக்கமாகவும், விரிவாகவும் உணர்வு பெறவும், ஏறத்தாழ 2-30 மணி நேரம் கூறினார். முடிவில் திரு. இரத்தினம் அவர்கள் நன்றி கூற, இரவு 1-30 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது. உள்ளூர் அன்பர்களும், வெளியூர் அன்பர்களும், இரவு நெடுநேரம் இருந்து கேட்டதும், வெளியூர் அன்பர்களுக்குத் திருப்பூர் கிளை இரவு உணவு ஏற்பாடு செய்திருந்ததும் குறிப்பிடத் தக்கனவாகும்.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகப் போராளிகளுக்கு, மூலனூரில் 4-ஆம் முறையாகப் பொருளளிப்பு!

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் போராளிகள் குழுஒன்று திருப்பூரைத் தலைமையிடமாகக்கொண்டு இயங்கி வருவது, கோவை, பெரியார் மாவட்டங்களைச் சார்ந்த, ஈழ மக்கள் ஆதரவாளர்கள் அனைவரும் அறிந்ததே. அக் குழுவினரில், சிவம், சுந்தர், காசி, ஆகிய மூன்று போராளிகளும், மூலனூர் நகர், தாராபுரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி, குண்டடம் அரசு மேல்நிலைப்பள்ளி, ஆகிய இடங்களுக்கு, ஆசிரியர்களாகிய, சோ.க. குமாரசாமி, ப. பாலுச்சாமி ஆகியோர் துணையுடன் சென்று, தங்கள் நாட்டின் நிலையையும், சிங்களப்படைத்துறைக் காடையர்களின் கொடுமை, அக் கொடுமையின் விளைவாகத் தாங்கள் கருவியேந்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டநிலை ஆகியனவற்றை விளக்கமாக எடுத்துக் கூறினர். அவற்றைக் கேட்ட ஆசிரியர்களும், மாணாக்க, மாணாக்கியர்களும், பொதுமக்களும் மனமுவந்து பொருளளிப்பு நல்கினர்.

அதன் விளக்கம் :	உருபா
மூலனூர் நகர், பொதுமக்கள்	2008-00
தாராபுரம் இ.பி. நகராட்சி உயர்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள்	608-00
குண்டடம் அரசுயர் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள்	580-00
மொத்த உருபா	3196-00

இப்பொருளளிப்பில், மூலனூரில் தாங்கள் பொருளளிப்புச் செய்ததோடு, பொருள் தண்டல் குழுவினருடன் வந்து, தங்கள் நண்பர்கள் ஆதரவாளர்களிடம் விளக்கிக்கூறித் துணைநின்ற, திரு. இலிங்கசாமி, திரு. வெங்கிடுசாமி, திரு. கிட்டுச்சாமி, ஆகியோருடைய பணி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். குழுவினர் வந்து கேட்டவுடன் நூறும், ஐம்பதுமாகப் பலர் நல்கினர். அவர்களது ஈக

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

உறுதியும் உண்மையும் இறுதியில் வெல்லும்!

தொடர்: 5. (சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழீழம் விடுதலை பெறுமா? வழியென்ன?

- மலர்மாறன் -

ஓர் ஈழத் தமிழனுக்கு, 4 சிங்களவர் என்ற விழுக்காட்டில் இலங்கையின் மக்கள் தொகை அமைந்துள்ளது.

1 ஈழத் தமிழனுக்கு, 4 சிங்களவர்கள் இருக்கிறார்கள்; அதே சமயத்தில் 4 சிங்களவர்களுக்கு 20 இந்தியத் தமிழர்கள் இருக்கிறார்கள்.

1 ஈழத் தமிழனை, 4 சிங்களவர்கள் சேர்ந்து அழித்துவிட முடியும் என்று சிங்கள வெறிக்கும்பல் நினைத்துக் கொண்டிருக்கிறது. அந்த 4 சிங்களவர்களை, 20 இந்தியத்தமிழர்கள் அழித்துவிட முடியாதா? முடியும்.

500 இலக்கமாக இருக்கும் இந்தியத் தமிழர்கள் நினைத்தால், காட்டு விலங்காண்டிச் சிங்களக் கும்பலைக் கூண்டோடு இந்துமா கடலில் தூக்கி எறிந்து விடலாம். ஈழத் தமிழர்களைக் காப்பாற்றி, ஈழத் தமிழ் நாட்டையும் அமைத்துக் கொடுத்துவிடலாம்.

தமிழர்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச்செல்லும் பொறுப்பு தமிழர் ஒருவரிடம் இருந்தால் இதை எளிதில் நிறைவேற்றி விடலாம்.

தமிழர்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச்செல்ல வேண்டிய பொறுப்பு, இப்போது மா. கோ. இராமச்சந்திரனிடம் இருக்கின்றது.

அவர் எப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், தெரியுமா?

மா. கோ. இராமச்சந்திரன் சிறப்பாக ஆட்சி செய்துக் கொண்டிருக்கிறார் என்று புகழப்படுகிறார்.

யாரால்?

இலங்கையை ஆண்டுக் கொண்டிருக்கின்ற செயவர்த்தனாவின் தம்பியால் புகழப்பட்டிருக்கிறார்.

தமிழர்களை ஆயிரக்கணக்கில் சுட்டுக்கொன்று, தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துக் கொண்டிருக்கும் காட்டு விலங்காண்டி ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவா செயவர்த்தனா பல நாடுகளுக்குப் பயணம் செய்து, தமது அண்ணன் செயவர்த்தனாவின் ஆட்சிக்கு ஆதரவு திரட்டிக் கொண்டிருப்பவர்தாம் அவரின் தம்பி. அவர்தான் மா. கோ. இராமச்சந்திரனின் ஆட்சிக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

தமிழினத்தைக் காப்பாற்ற தமிழர்களின் தலைவராக அமைக்கப்பட்டுள்ள வரை தமிழினத்தை அழித்துக் கொண்டிருப்பவர் புகழ்கின்றார்.

தமிழினத்தைக் காப்பாற்றுவதற்காக மா. கோ. இராமச்சந்திரனைப் புகழ்கின்றாரா? அல்லது காட்டிக் கொண்டிருப்பதற்காகப் புகழ்கின்றாரா?

தமிழினத்தைக் காப்பதற்காக மா. கோ. இராமச்சந்திரன் புகழப்படவில்லை; ஏனெனில், அவர் தமிழ் இனத்தைக் காப்பதற்கு முயன்றிருந்தால், செயவர்த்தனா கும்பல் இப்போது இந்துமா கடலில் தஞ்சம் புகுந்திருக்கும். அப்படி நடைபெறவில்லை. ஆகவே, தமிழினத்தைக் காப்பதற்காக அன்று என்பது உறுதியாகியது.

எஞ்சி இருக்கும் செயல் தமிழினத்தைக் காட்டிக் கொடுப்பதுதானே!

தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பவர், தமிழக முதல் அமைச்சராக இருக்கின்றார். அவர் முதல் அமைச்சராக இருக்கும்வரை தமிழினத்தின் அழிவைத் தடுக்கவே முடியாது.

∴ ∴ ∴

ஈழத் தமிழ்நாட்டை எப்படி அடைவது?

இலங்கைப் படையில் 40 ஆயிரம் சிங்களப் படை வீரர்கள் இருக்கின்றார்கள்.

தமிழகத்தின் காவல் துறைப் படையில் 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள்.

தமிழகத்திலுள்ள பழைய படை வீரர்கள் ஏறத்தாழ 10 ஆயிரம் பேர் இருக்கிறார்கள்.

சிங்கள வெறிக்கும்பலை ஒழித்துக்கட்ட தங்களை அனுப்பி வைக்கும்படி, தமிழகக் காவலர்களின் கழகம், ஏற்கனவே, தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எங்களுக்குக் கருவிகளைக் கொடுங்கள், சிங்கள வெறிக்கும்பலை அழிக்கிறோம் என்று பழைய படை வீரர்கள் ஏற்கனவே கேட்டுள்ளனர்.

தமிழகக் காவல் படையிலுள்ள 20 ஆயிரம் பேரையும், பழைய படை வீரர்கள் 10 ஆயிரம் பேரையும் சேர்த்துத் தமிழ் ஈழ விடுதலைத் தொண்டர் படை பயிற்சி அணியை தமிழக அரசு அமைக்கவேண்டும்.

நம் இனம் இலங்கையில் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், ஈழத் தமிழனைக் காப்பாற்றத் தம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று எண்ணித் தம்மையே அழித்துக் கொண்டிருக்கிற தமிழர்கள் ஏராளம் இருக்கிறார்கள்.

ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் பணியிலே தங்களை இழந்துக்கொள்ள, இலக்கக் கணக்கான தமிழ் இளைஞர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் இரண்டு இலக்கம் பேர்களைத் திரட்டிக் குறுகிய காலப் படை பயிற்சி கொடுக்கலாம்.

தமிழகத்தில் வேலையில்லை என்று பதிவு செய்து கொண்டிருப்பவர்கள் கூட 10 இலக்கத்திற்கும் மேற்பட்டவர்களாக உள்ளனர். அவர்களில் 4-இல் ஒரு பகுதியினரைத் திரட்டினால்கூட $2\frac{1}{2}$ இலக்கம் சேர்வார்கள். அவர்களுக்கும் பயிற்சி கொடுக்கலாம். ஆனால், இவர்கள் தேவையில்லை. ஈழத்தமிழ் இளைஞர்களை, இலக்கக்கணக்கான பேர் தங்கள் நாட்டு விடுதலைக்குப் போராடத் துடித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களில் ஒரு மூன்று இலக்கம் பேருக்குப் பயிற்சி கொடுத்து, ஈழத் தமிழ் விடுதலைத் தொண்டர் படையை அமைக்கலாம்.

ஏற்கனவே, கூறியபடி பயிற்சிபெற்ற பழைய படை வீரர்களும், காவலர்களும் 30 ஆயிரம் பேர் தமிழ் ஈழ விடுதலைப் படைப் பயிற்சி அணியில் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் 10 தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்தால் கூட, 3 இலக்கம் பேர்களுக்கு இரண்டு கிழமைகளில் துமுக்கி சுடும் பயிற்சி கொடுத்து விடலாம்.

இரண்டு கிழமைகளில் 3 இலக்கம் பேர்கள் அடங்கிய ஈழத்தமிழ் விடுதலைப் படையை நம்மால் அணியம் செய்துவிட முடியும்.

இதில் 2 இலக்கம் வீரர்களைத் துமுக்கிகளுடன் இரவோடு இரவாக இலங்கைத் தீவிற்குள் இறக்கிவிட வேண்டும்.

முடியுமா? ஏன் முடியாது?

ஈழத்திலே 35 இலக்கம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் ஏறத்தாழ 7 இலக்கம் வீடுகளில் வாழ்கின்றனர். அவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்கள் பல இலங்கையிலே இருக்கின்றன.

தமிழக அரசு தனது ஒற்றர்களின் மூலமாகவும், மற்றுமுள்ள கமுக்க அமைப்புகளின் மூலமாகவும் ஈழத் தமிழகத்திலுள்ள விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு, கமுக்கமாகத் திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

இரண்டு இலக்கம் தொண்டர் படை இறங்குவதற்கும், அவர்களுக்குத் தங்கும் இடங்களுக்கும், உணவிற்கும் ஏற்பாடு செய்வதற்கும், போர் புரிவதற்கும் தேவையான நடைமுறைகளை வகுப்பதற்கும் தேவையான திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் தமிழ்த் தொண்டர் படையினர் தங்க வேண்டும்.

தேவையான இடங்களில் தமிழர் ஒவ்வொருவர் வீட்டிலும் தொண்டர் படை வீரன் ஒருவனை விருந்தாளியைப் போலத் தங்கவைத்துவிடலாம் அந்தத் தொண்டர் படை வீரன் தனக்குத் தேவையான துமுக்கியையும், குண்டுகளையும் வைத்திருப்பான். அவனுக்குச் சாப்பாடும் அந்த வீட்டிலேயே கொடுக்க ஏற்பாடு செய்துவிட வேண்டும்.

இந்த ஏற்பாட்டின்படி 2 இலக்கம் தொண்டர் படை துமுக்கிகளுடன் இலங்கைத் தீவிலே அணிய நிலையில் இருப்பார்கள். அவர்கள் தனியாக இல்லாது ஈழத் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து, சிங்கள வெறியர்களை வேட்டையாடுவதற்கான ஆணையை எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டிருப்பார்கள்.

தனிப் படைப் பாசறைகளில் தமிழர் படை இல்லாததால், சிங்களப் படை தமிழ்த் தொண்டர்களைக் குண்டுபோட்டு அழிக்க முடியாது. தொண்டர் படைக்குத் தேவையான உணவு, உறையுள் சிக்கல் கொஞ்சம்கூட இல்லாது போய்விடுகின்றது.

இப்படிப் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்திய உடனேயே, தமிழ் ஈழ அரசை அமைத்து அறிவிப்பை வெளியிட வேண்டும்.

ஈழத்தமிழ் தலைவர்களில் யாராவது ஒருவரின் தலைமையில் ஈழத்தமிழ்நாடு அரசை அமைக்க வேண்டும். அவருக்கு உதவியாக ஓர் அமைச்சரவையையும் ஏற்படுத்தலாம்.

அந்த ஈழத்தமிழ்நாட்டு அரசுத் தலைவர் உலகிற்கு ஓர் அறிக்கையை வெளியிட வேண்டும்.

இலங்கை அரசிடமிருந்து, ஈழத்தமிழ்நாடு விடுவிக்கப்பட்டுத், தனி ஈழத்தமிழ்நாட்டு அரசு அமைக்கப்பட்டுள்ளதாகவும், உலகத்திலுள்ள தேசங்கள் தனது அரசை ஏற்புச்செய்ய வேண்டுமென்றும் வேண்டுகோள் விடவேண்டும். உலகத்தில் 72 நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் தெரிவித்து ஈழத்தமிழ்நாட்டு அரசைத் தாங்கள் வாழும் நாடுகள் ஏற்கும்படி முயற்சிகள் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அந்த அறிக்கையில் இலங்கைத் தீவிலுள்ள இன்னின்ன பகுதிகள் ஈழத்தமிழ் நாட்டைச் சேர்ந்தவையென்றும், அவற்றைவிட்டு இலங்கைப் படை 24 மணி நேரத்திற்குள் விலகிச் சென்றுவிட வேண்டுமென்றும், இல்லையேல் அவர்கள் விரட்டியடிக்கப் படுவார்கள் என்றும் எச்சரிக்கை விட வேண்டும்.

24 மணி நேரத்தில் இலங்கையிலுள்ள விடுதலைப் போராளிகளும், இரண்டு இலக்கம் தொண்டர்களும், திட்டமிட்டுச் செயலில் இறங்க வேண்டும். தமிழ் ஈழப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களிலிருந்து இலங்கைப் படை வீரர்களைத் துரத்தி அடிக்க வேண்டும்; எதிர்க்கும் இலங்கைப் படை வீரர்களை அழிக்க வேண்டும்.

இலங்கை தனது முழுமூச்சுடன் எதிர்க்க துணியும்; தமிழ் ஈழ நாட்டுப் பகுதிகளை வந்து தாக்க முற்படும். நமது விடுதலைப் போராளிகளும், தொண்டர் படையும் தற்காப்பை முதன்மையாகக் கருதிச் செயல்பட வேண்டும். தமிழ் ஈழ நாட்டிற்குள் நுழையும் இலங்கைப் படையைத் தகர்த்தெறிய வேண்டும். இலங்கைப் படையைத் தமிழ் ஈழப் பகுதிக்குள் வரவிடாமல் தடுத்துவிட்டால், அந்த நிமையம் முதல் தமிழ் ஈழநாடு உறுதிப்பட்டு விட்டதாக உலக நாடுகள் கருதிவிடும்.

முதலில் நட்பு நாடுகள் ஏற்பிசைவு கொடுக்கும். பின், படிப்படியாக எல்லா நாடுகளும் ஏற்பிசைவு கொடுத்துவிடும். தனித்தமிழ் ஈழநாடு நிலைபெற்று விடும்.

இதுதான் தமிழ் ஈழ நாட்டை உருவாக்கவேண்டிய வழியாகும்.

உலகத்தில் பல நாடுகள் இப்படித்தான் உருவாக்கப்பட்டுள்ளன. இப்படி நாடுகளை, உருவாக்கும் முறையைத்தான் அனைத்துத் தேசச்சட்டம் 'மரபு வழி உரிமை' (Succession) என்றும், புரட்சி (Revolt) என்றும் கூறுகிறது. இவை அனைத்துத்தேச சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட முறைகளாகும்.

(தொடரும்)

∴ ∴

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வு அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும். எளிய நிலையில் இருந்தாலும், தங்களால் முடிந்த அளவில் பொருளளிப்புச்செய்து, தங்கள் இனவுணர்வை வெளிப்படுத்திக்கொண்ட அனைத்துப் பொதுமக்களும் பாராட்டிற்குரியவர்கள். மூலனூர் தொடக்க மருத்துவநிலைய ஊழியர்களிடம் தண்டல் செய்து உதவிய, திரு: சண்முகம் என்ற ஊழியரும், பொருளளிப்பு நல்கிய ஊழியர்களும், பாராட்டுக்குரியவர்களே.

தாராபுரம் நகராட்சி ஆணையாளரின் அனுமதி பெற்று, உடன் பொருள் தண்டலுக்கு முழுமனதுடன் உதவிய தாராபுரம் பள்ளியின் தலைமையாசிரியர் பாராட்டுக்குரியவராவார். மாணாக்கர்களிடம் விளக்கங்கள் கூறி, ஒவ்வொரு வகுப்பாகச் சென்று தண்டுதல் செய்த அப்பள்ளி ஆசிரியர் திரு: பால்சாமுவேலின் பொறுப்புணர்வும், இனவுணர்வும் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். விடுதலைப் போராளிகளுக்கு உதவுவதுதான் ஈழத்தமிழருக்கு நாம் செய்யும் உண்மையான கடமையாகும், என எண்ணிச் செயல்பட்ட ஆணையார், தலைமையாசிரியர், துணை நின்ற ஆசிரியர்கள், பொருளுதவிய ஆசிரியர்கள் அனைவரும், மாணாக்கர்களும், பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்.

— செய்தி: புலவர். அறிவுடைநம்பி.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 68] பதிவு எண் TN/MS (C)/657

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் தலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.